

கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் எம்.எல்.ஏ. அவர்கள், சாலை விபத்தில் மறைந்த திரைப்படத் தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரி அவர்களின் திருவுடலுக்கு, சென்னை மயிலாப்பூரில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்று மாலை வைத்து மரியாதைச் செலுத்தினார். அப்போது நடிகர் ஜீவா உள்ளிட்ட அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

# பட்டத்து யானை!

- நாட்டு மக்களுக்கே
நம்ப முடியவில்லை!
பட்டத்து யானை
பல்லாங்குழிக்குள்
விழுந்துவிட்டதென்பதை!

- கழகத் தலைவரே!
தேர்தல் களம்
மூழ்கடித்ததென்னவோ
உங்களை!
மூச்சுத்திணறுவதோ...
எங்களுக்கு!

- குளத்தில் மூழ்கினால்
மரணம்
மனிதனுக்கு!
குளத்தூரே மூழ்கினால்
மரணம்
மாநிலத்திற்கு!

- குளத்துக்கு
தெரியவில்லையே...
கடலுக்குத் தெரிந்த
கதிரவனின் பெருமை!

- தலைவரே!
காமராஜர்
என்றுன்னைக்
காட்டுவதற்கு
தேர்தல் களத்தையா
குளத்தூர்
தேர்ந்தெடுக்க வேண்டும்?

- சக்திக்கு மீறி
உழைத்தாய்...!
நிறைய்ய வழிந்த
உன்
நெற்றி வேர்வை
மக்களின்
கண்களை அல்லவா
மறைத்து விட்டது!

- அது –
எந்திரமாய் இல்லாமல்
இதயமாய்
இருந்திருந்தால்
வாக்குகளை
இப்படி வாங்கியிருக்காது!

- மறந்துவிடாதீர்கள்
மைந்தர்களே...
நீங்கள்
மூழ்கடித்திருப்பது
யாரை...?
திருவாரூர் தேரை!



– கவிஞர்
நெல்லை ஜெயந்தா

### தேர்தல் ஆணையம் ஒரு நேர்மையற்ற அமைப்பாக உள்ளது!

# மோசடிகள் மூலமே பா.ஜ.க. தேர்தல்களில் வெற்றி பெற்று வருகிறது!

## பீகார் முன்னாள் முதல்வர் தேஜஸ்வி குற்றச்சாட்டு!

பீகார்,மே,8-

தேஜஸ்வி வெளியிட்டுள்ள சமூகவலை தளப்பதிவில், அரசு நிர்வாகத்தின் அனைத்து அமைப்புகளும், நிறுவனங்களும் பாஜகவின் கைகளில் உள்ளதாகவும், மோசடிகள் மூலமே பா.ஜ.க. தேர்தல்களில் வெற்றி பெறுகிறது என்றும், தேர்தல் ஆணையம் ஒரு நேர்மையற்ற அமைப்பாக உள்ளதாகவும் விமர்சித்துள்ளார். பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்திற்கு எதிராகப் போராடுவதைத் தொடர்வோம் என்றும், இனி வரும் காலங்களிலும் பா.ஜ.க.வின் அனைத்து மோசடிகள் மற்றும் சதித்திட்டங்கள் அனைத்தும் அம்பலப்படுத்தப்படும்



என்றும் அவர் தெரிவித்துள்ளார். பீகார் கடந்த ஆறு மாதங்களில் இரண்டு முதலமைச்சர்களைக் கண்டுள்ளதாகவும், முதல் ஆண்டு பதவிக்காலத்தின் 50 சதவீதம் ஏற்கனவே வீணாகிவிட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

பீகார் அரசின் கருவூலம் காலியாக உள்ளதை மறைத்து, உண்மையான பிரச்சினைகளிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பும் வகையில், என்கவுண்டர்கள், குடியிருப்புகளை இடிப்பது உள்ளிட்ட புல்டோசர் நடவடிக்கைகள் போன்ற நாடகங்களை அரசு தொடர்ந்து அரங்கேற்றி வருவதாகவும் தேஜஸ்வி குற்றம்சாட்டி உள்ளார்.

மோசடிகள் மூலமே பாஜக வெற்றி பெறும் தேஜஸ்வி விமர்சனம் அரசு நிர்வாகத்தின் அனைத்து அமைப்புகளும், நிறுவனங்களும் பா.ஜ.க.வின் கைகளில் உள்ளன மோசடிகள் மூலமே பா.ஜ.க. தேர்தல்களில் வெற்றி பெறுகிறது

தேர்தல் ஆணையம் ஒரு நேர்மையற்ற அமைப்பாக உள்ளது பாஜகஆர்எஸ்எஸ் சித்தாந்தத்திற்கு எதிராகப் போராடுவதைத் தொடர்வோம் இனி வரும் காலங்களிலும் பா.ஜ.க.வின் அனைத்து மோசடிகள், சதித்திட்டங்கள் அனைத்தையும் அம்பலப்படுத்துவோம் பீகார் கடந்த 6 மாதங்களில் 2 முதலமைச்சர்களைக் கண்டுள்ளது முதல் ஆண்டு பதவிக்காலத்தின் 50% ஏற்கனவே வீணாகிவிட்டது

பீகார் அரசின் கருவூலம் காலியாக உள்ளதை மறைத்து, உண்மையான பிரச்சினைகளிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பும் வகையில் என்கவுண்டர்கள், குடியிருப்புகளை இடிப்பது உள்ளிட்ட புல்டோசர் நடவடிக்கைகள் போன்ற நாடகங்களை பீகார் அரசு தொடர்ந்து அரங்கேற்றி வருகிறது

### 10,000+ கி.மீ. வரை கண்டம் விட்டு கண்டம் பாயும்

# ‘அக்னி 6’ ஏவுகணை சோதனை நடத்த தயார்!

புதுடெல்லி, மே.8–

பத்தாயிரம் கி.மீ. வரை கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி6 ஏவுகணை வரலாறு படைக்க தயாராக உள்ளது என்று பாஜக தெரிவித்துள்ளது. இந்தியாவின் முதல் கண்டம் விட்டு கண்டம் பாயும் ‘அக்னி6’ ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) வடிவமைத்துள்ளது.

இந்த ஏவுகணை சோதனையை நடத்த தயாராக இருப்பதாகவும், அரசின் அனுமதிக்காக காத்திருப்பதாகவும் டிஆர்டிஓ தலைவர் சமீர் வி.காமத் சமீபத்தில் கூறியிருந்தார்.

இந்நிலையில், பாஜக தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் நேற்று வெளியிட்ட பதிவில், ”அக்னி6 வல்லரசு பாதையை நோக்கி இந்தியா முன்னேறுகிறது. 10,000+ கிமீ தூரம் பாயும் திறன் மற்றும் எம்ஐஆர்வி தொழில்நுட்பத்துடன், அக்னி6 வரலாறு படைக்கத் தயாராக உள்ளது.





இந்த ஏவுகணை இந்தியாவின் பாதுகாப்பை எதிரிகள் ஊடுருவ முடியாததாக மாற்றும். அத்துடன் உலகின் மிகவும் சக்திவாய்ந்த நாடுகளின் வரிசையில் நம்மை நிலைநிறுத்தும். வலிமையான இந்தியா, பாதுகாப்பான இந்தியா என்று குறிப்பிட்டுள்ளது. மேலும் பாஜக பதிவேற்றிய ஒரு காணொலியில் கூறியிருப்பதாவது: இதுவரை அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய 5 நாடுகள் மட்டுமே கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சக்தியைக் கொண்டுள்ளன.

இப்போது, இந்தியா அதே வரிசையில் தனது நிலையை வலுப்படுத்தப் போகிறது. அக்னி6 இந்தியாவின் அடுத்த தலைமுறை ஏவுகணையாகும். நீண்ட தூரம் சென்று தாக்கும் திறனுடன், இந்தியாவின் வலிமை பிராந்திய அளவில் மட்டுமல்லாமல் உலகளாவிய ரீதியிலும் விரிவடையப் போகிறது. இங்குதான் அடுத்த பெரிய மாற்றம் நிகழ்கிறது. ஒரு ஏவுகணை, பல இலக்குகள் அதுவே எம்ஐஆர்வி தொழில்நுட்பம்.

இது ஒரே நேரத்தில் பல பணிகளைச் செய்யக்கூடியது. அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகளிடம் மட்டுமே இருந்த இந்த சக்தி, இப்போது இந்தியாவுக்கும் கிடைத்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.எம்ஐஆர்வி தொழில்நுட்பம் என்பது, ஒரே ஒரு ஏவுகணை மூலம் வெவ்வேறு இலக்குகளுக்குப் பல அணு ஆயுதங்களை அனுப்ப அனுமதிக்கும் ஒரு நுட்பமாகும். இது தாக்குதல் திறனை அதிகரிப்பதுடன், எதிரி நாடுகளின் ஏவுகணை எதிர்ப்புத் தற்காப்பு அமைப்புகளை முறியடிக்கவும் உதவுகிறது.

